**ஜே.ஆர். ஜெயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையம் - 2015**

---

ஜே.ஆர். ஜெயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர். ஜெயவர்தன நிலைய அதிகாரச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஜே.ஆர். ஜெயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இனங்காணாமல் காணிகளுக்காகவும் 5 சதவீத பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பெறுமானத்தேய்வு சதவீதம் தீர்மானிக்கப்படும் போது சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தின் மோட்டார் வாகனத்திற்கு பெறுமானத்தேய்விடும் போது பயன்தரு ஆயுட் காலம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நூதானசாலையில் உள்ள வரலாற்றுப் பெறுமதியுள்ள பாரம்பரிய சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்துடன் இணைக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றில் ரூபா 5,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனி 2008 ஆண்டில் மூடப்பட்டிருந்ததுடன் முதலீட்டிற்காக ரூபா 700,000 மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த முதலீடு தொடர்ந்தும் தேறாததாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலாக போதியளவான ஒதுக்கீடுகளைச் செய்வதற்கோ அல்லது கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தின் நூலகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ரூபா 4,140,350 பெறுமதியான எஞ்சிய புத்தக இருப்புக்கள் மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கட்டிடங்களுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடவேண்டிய ரூபா 2,065,667 தொகையான மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற மீளச் செலுத்தவேண்டிய கட்டிட வாடகை வைப்புக்கள் ரூபா 1,187,190 தொகை மற்றும் மீளச் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு ரூபா 1,154,624 தொகை என்பவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 294,471 தொகையான 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வுக் கட்டணத்தை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தி மற்றும் 4.2.2 (அ)(ஆ) பந்திகள் | நிலையத்தின் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டம் 2013 மார்ச் 08 ஆந் திகதியின் பின்னர் அதாவது 33 மாதங்களின் பின்னர் 2015 திசெம்பர் 09 ஆந் திகதி கூட்டப்பட்டமையின் காரணமாக மாதாந்தம் நிதிக்கூற்றுக்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பித்தலின் செயலாற்றல் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு தடவை கலந்துரையாடல் மற்றும் அந்த அறிக்கை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 105,750,350 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவும் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வும்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 3,384,453 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,585,848 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,201,395 இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 2,934,398 இனால் குறைவடைந்திருந்த போதிலும் தொலைத்தொடர்பு பயன்பாடு மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 6,397,733 இனால் குறைவடைந்தமை பற்றாக்குறை குறைவடைந்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும்போது 2013 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதி மிகையொன்று காணப்பட்ட போதிலும், 2014

மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. ஊழியர் பணிக்கொடை, அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது நிலையத்தின் ஒட்டுமொத்த பங்களிப்பு 2013 ஆம் ஆண்டு முதல் 2015 வரை முறையே ரூபா 21,318,216 ரூபா 12,384,561 மற்றும் ரூபா 17,889,699 ஆக இருந்தது. அதன் படி 2013 ஆம் ஆண்டில் உயர்ந்த பங்களிப்பொன்று காண்பிக்கப்பட்ட போதிலும் பின்னைய ஆண்டுகளின் போது அந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்கு முடியாதிருந்தும் அதனை முன்னேற்றுவதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் படி நிறுவனத்தின் நடைமுறை விகிதம் 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 5.8.1 மற்றும் 6.9.1 ஆக இருந்தது. நடைமுறைச் சொத்துக்களில் 89 சதவீதம் குறுங்கால முதலீட்டை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் நிறுவனத்தில் பாரியளவான சொத்துக்களின் அளவொன்று திரவச் சொத்துக்களில் வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 4,140,350 பெறுமதியான எஞ்சிய புத்தக இருப்பு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக விரைவுச் சொத்து விகிதமும் நடைமுறைச் சொத்து விகிதமும் சமமானதாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னாள் சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன அவர்களின் ஆவணங்கள், கோவைகள், ஞாபகச் சின்னங்கள், பெற்றுக்கொண்ட விருதுகள் பரிசுகளை வைப்புச் செய்தல், அவற்றை பாதுகாத்தல் மற்றும் காப்பீடு, காட்சிப்படுத்துதல் கூட்டங்களை நடாத்துதல், அரசாங்க ஆவணக் காப்பகத்திற்குக் கிடைக்கின்ற சகல அறிக்கைகள் மற்றும் முத்திரையிடப்பட பொருட்களை வைத்துக் கொள்ளல் போன்றன நிலையத்தின் பிரதான நோக்கமாக இருந்ததுடன் அந்த நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 25,925,400 தொகையான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 86 சதவீதத்திற்கு கூடிய அளவு அதாவது ரூபா 22,500,000 தொகையொன்று நிர்மாணம் மற்றும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு 14 சதவீத அளவே பயன்படுத்தப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட 23 செயற்பாடுகளுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 25,312,400 பெறுமதியான 18 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கைத்திட்டத்தினதும் அதன் செயல் முன்னேற்றத்தினதும் பரீட்சிப்பின் போது மொத்த இலக்கிடப்பட்ட 23 செயற்பாடுகளில் 12 செயற்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பு கையளிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் 2015 ஆம் ஆண்டு வரையில் நிறுவனத்திலிருந்து விலகியிருந்ததுடன் அந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்து செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) கட்டிட வாடகை வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின் போது கட்டிட வாடகை வருமானமாக ரூபா 13,045,782 தொகை கிடைத்திருந்ததுடன் 3 அரசாங்க நிறுவனங்களையும் 8 தனியார் நிறுவனங்களையும் உள்ளடக்கிய 11 நிறுவனங்களுக்காக கட்டிடங்களை வாடகைக்கு வழங்கும் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மாதாந்த வாடகை மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறப்படாது வெவ்வேறு சதுர அடி அளவில் வெவ்வேறு மாதாந்த வாடகையின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) மாதாந்த வாடகை ரூபா 40,000 வீதம் இரண்டு நிறுவனங்களுக்காக முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் நிலையம் மற்றும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட வாடகைக் கட்டிடத்திற்கான நீர்பட்டியல்களுக்காக ரூபா 434,555 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் நீருக்காக எவ்வித தொகையும் பாவனையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சில வாடகை உடன்படிக்கைகளில் நீர்ப்பட்டியல் செலுத்துதல் வாடகையாளரினால் செலுத்த வேண்டியமை குறிப்பிடப்பட்டிருக்கும் போது நிலையத்தினாலேயே சகல பட்டியல்களும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) வாடகை உடன்படிக்கை தயாரிக்கும் போது வாடகையாளரினால் பயன்படுத்தப்படுகின்ற மின்சாரச் செலவினங்களை அறவிடுவதற்காக நிதியேற்பாட்டில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,024,814 தொகை மின்சாரப்பட்டியல்களுக்காக செலுத்தப்பட்டிருந்தது. வாடகைக்கு வழங்கப்பட்ட 9 கட்டிடங்களுக்கும் தனித்தனியாக மின்மானி பொருத்தப்படாதிருந்தமையும் இதற்குத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) 1988 இன் 77 ஆம் இலக்க கே.ஆர்.ஜெயவர்தன நிலையத்தின் அதிகாரச்சட்டத்தின் (3) ஆம் பந்தியின் படி குடியரசின் சனாதிபதி, உயிருடன் வாழ்கின்ற முன்னாள் சனாதிபதிகள் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், சனாதிபதி செயலாளர் தேசிய சுவடிக்கூடத்தின் பணிப்பாளர் மற்றும் சனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற இரண்டு அங்கத்தவர்கள் என்போரை கட்டுப்பாட்டுச் சபை கொண்டிருந்தது. மேற்கூறப்பட்ட நபர்களைச் சேர்த்து கட்டுப்பாட்டுச்சபை கூட்டம் நடாத்துதல் நடைமுறையில் சாத்தியமற்றமையினாலும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதனாலும் கட்டுப்பாட்டுச் சபைக் கட்டத்தை முறையாக நடாத்துவதற்கு இயலுமான வகையில் அதிகாரச்சட்டத்தைத் திருத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக நடாத்தப்படுகின்ற நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலைக்காக சமையற்காரர் உதவி சமையற்காரர் மற்றும் தொழிலாளராக மூன்று பேர் 2014 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு நிலையத்தின் நிதியத்திலிருந்து 2014 யூன் மாதம் முதல் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 1,453,310 கூட்டுத்தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மதியுரைச் சேவைக் கட்டணம்

நிலையத்தினால் நிர்மாண செயற்பாடுகள் தொடர்பாக மதியுரையாளரொருவர் சேர்க்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது படிகளாக ரூபா 3,569,456 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2007 ஆகஸ்ட்டில் விநியோகிக்கப்பட்ட மதியுரையாளரின் ஆட்சேர்த்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் பந்தியின் படி தனி நபர் மதியுரையாளரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு 3 விண்ணப்பதாரிகளிடம் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளுக்கிடையே தகைமையுள்ள நபரொருவர் தேர்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக விண்ணப்பம் கோரப்படாமல் 2012 ஆகஸ்ட் 01 முதல் 2015 யூலை 31 வரையான காலப்பகுதிக்காக உத்தியோகத்தரொருவர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 4.6 ஆம் பந்தியின் படி தெரிவு செய்யப்பட்ட மதியுரையாளருடன் முறையான உடன்படிக்கையும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ii) ஒப்பந்தத் தொகையில் மதிரைக் கட்டணமாக 8 சதவீதம் அல்லது ரூபா 1,311,421 தொகை பரீட்சிப்புக் கட்டணமாக நாளொன்றிற்கு ரூபா 18,000 வீதம் ரூபா 2,258,034 தொகையுமாக ஒரே செயற்பாட்டிற்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) நிலையத்தின் தளத்தின் மலசலகூடத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் நிலையத்திற்கு சட்டரீதியான உரித்தொன்று இல்லாத பிரேமா பில்டின் சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தை நவீனமயப்படுத்துவதற்காக முறையே ரூபா 1,063,043 தொகை மற்றும் ரூபா 309,357 தொகை மேற்பார்வை மற்றும் மதியுரைக் கட்டணம் 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் எவ்வித நவீனமயப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் நடைமுறை**

மூன்று மாடிக் கட்டிட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 7,995,665 தொகையான செலவினம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொறியியல் ரீதியான மதிப்பீட்டுடனும் மாநகர சபையின் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்துடனும் கட்டிடத்திட்டம் அங்கீகரிக்கப்படாமல் மூன்று மாடிக் கட்டிடம் நவீனமயப்படுத்தலுக்காக நிதியளிப்புச் செய்யப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த விலையான ரூபா 6,451,086 இற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தக்காரருடன் 2014 மார்ச் 15 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2014 யூன் 15 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. தளம் மற்றும் முதலாவது மாடிகளின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், இரண்டாவது மாடியின் நிர்மாண நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரர் நிறைவேற்ற வேண்டிய எஞ்சிய வேலைப்பகுதியை நிறைவேற்றவோ அல்லது முறையான பிரகாரம் உடன்படிக்கையை இரத்துச் செய்யாமலோ இது வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 511,969 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய அளவிடைப்பத்திரங்களில் ரூபா 732,500 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இரும்பு மட்டம் மற்றும் கூரையொன்றைப் பொருத்தும் வேலை விடயம் நிறுவனத்தினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வேறொரு ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றப்பட்டு ரூபா 2,994,928 தொகை செலுத்தப்பட்டிருந்தது, இதன்படி ஆரம்ப மதிப்பீட்டை விட ரூபா 2,262,428 தொகை

அதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது. முதலாவது உடன்படிக்கையாளருக்கு கையளிக்கப்பட்ட பணிகள் வேறொரு தரப்பினரின் மூலம் நிறைவேற்றப்பட்டமையின் காரணமாக முதலாவது ஒப்பந்தக்காரரினால் வேலை நிறுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்குச் சொந்தமான ரூபா 91,002,055 தொகையான நிலையான வைப்புக்கள் காணப்படும் போது 2 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 238,900 வீதம் 120 மாதாந்த தவணைகளில் செலுத்தும் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 14,000,000 தொகையான கடன் தொகை பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கடன் வட்டியாக ரூபா 4,438,651 தொகை செலுத்தப்பட்டமையால் நிறுவனத்திற்கு நிதிரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உச்ச இருப்பின் அளவு இனங்காணப்படாமல் இருப்பு சேர்க்கப்பட்டு வைக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 330,350 பெறுமதியான 955 புத்தகங்கள் சேதமடைந்திருந்தன.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட நிறுவனக் கட்டமைப்பும் பதவியணியினரும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பதவியணியினர்களை அங்கீகரித்துக் கொள்வதற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிலையத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் எண்ணிக்கையை ஒப்பிடு செய்தபோது 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013, 2014 ஆம் ஆண்டுகளின் போது ஊழியர் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்றைக் காணமுடிந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது ஊழியர் எண்ணிக்கை குறைவும், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 380,159 தொகையான ஒரு ஊழியரின் கிரயம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 529,780 வரையான அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீடு 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் மாதிரியின் படி தயாரிக்கப்பட்டிராததுடன் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்தபோது 28 சதவீதம் முதல் 658 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.2 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

2011 ஆம் ஆண்டின் பின்னர் நிலையத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் சனாதிபதி செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனமொன்றானமையால் அந்த செயலகத்தின் மூலமேனும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமையினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் செயலாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| பிரதான துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக்கட்டுப்பாடு | நிறுவனத்தின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நிதியத்தை ஈடுபடுத்துதல் போதியளவான மட்டத்தில் மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) வருமானக் கட்டுப்பாடு | மதிப்பீட்டாளர் அறிக்கை பெறப்பட்டமை மற்றும் வாடகை உடன்படிக்கை முறையாக அமுல்படுத்தப்படாமை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தங்களுக்குரிய கொள்வனவு வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமை |
| (ஈ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் ஊழியர் எண்ணிக்கை அங்கீகரித்துக் கொள்ளப்படாமை |
| (உ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை. |
| (ஊ) இருப்புக் கட்டுப்பாடு | (i) இருப்புப் புத்தகம் முறையையாகவும் நாளது வரையாகவும் பேணப்படாமை<br>(ii) உச்ச இருப்பு மட்டத்தை இனங்கண்டு அதன்படி நடவடிக்கை எடுக்காமை |